**Source**: *Tamil Murasu, p3*
**Date**: *6 October 2015*

# இதய அறுவை சிகிச்சைக்கு மாற்றாக புதிய சாதனம்

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழக ஆய்வாளர்கள், இதய அறுவை சிகிச்சைக்கு மாற்றாக புதிய சாதனத்தை உருவாக்கியிருக்கின்றனர்.

'VeloX' என்ற அந்தப் புதிய செயற்கை இதய 'வால்வ்'வை (படம்), சிறிய துளையின் மூலம் நோயாளிகளுக்கு பொருத்தி விட முடியும் என்று ஆய்வாளர் கள் தெரிவித்துள்ளனர்.

இது, சீரற்ற இதய ரத்த ஓட்டத்தைக் கொண்ட நோயாளிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதப்படுகிறது. ஒவ்வொர் ஆண்டும் 'Mitral Regurgitation' என்ற இதய குறைபாட்டுக்கு 300 நோயாளிகள் அறுவை சிகிச்சை செய்து கொள்கின்றனர்.

இம்முறையில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படும்போது இதயம் நிறுத்தப்படுகிறது. இந்நிலையில் பல நோயாளிகள் வயதான காரணத்தினாலும் பல நாட்பட்ட நோய்கள் இருப்பதாலும் இந்த அறுவை சிகிச்சையை செய்துகொள்வதில்லை.



இத்தகைய நோயாளிகளுக்கு என்யுஎஸ் ஆய்வாளர்களின் புதிய கண்டுபிடிப்பு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

என்யுஎஸ் யோங் லூ லின் மருத்துவப் பள்ளியின் டாக்டர் ஜிம்மி ஹோான், "குறைந்தபட்சம் ஐந்து செ.மீட்டர் துளையில் புதிய சாதனத்தை பொருத்திவிடலாம்," என்றார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction